www.padippakam.com



# 24

# ஈழத்தவர் வரலாறு


## கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை....

-செங்கை ஆழியான்-

**1679** ஆம் ஆண்டு வன்னிப்பிரதேசம் ஆறு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பனங்காமமும் பரந்தன் வெளியும் ஒரு மாகாணமாக விளங்கின. இதன் வன்னிமையாக டொன்பிலிப் நல்லமாப்பாணன் விளங்கினான். பேகன் விளாக்குளப் பிரிவின் வன்னிமையாக டென்கஸ்பார் குஞ்சி நயினார் இருந்தான். மேற்பற்றும் முள்ளியவளையும் ஒரு மாகாணமாகக் குட்டிப்பிள்ளை என்ற வன்னியனால் ஆளப்பட்டன. கரிக்கட்டு மூலையின் வன்னிமையாகச் சேந்தியினால் என்பவனும் கருநாவற்பற்று - புதுக்குடியிருப்புப் பிரிவின் வன்னிமையாக திரிகைலை என்பவனும் தென்னமரவாடி என்ற பிரிவின் வன்னிமையாக செம்பாத்தை (சியாமாத்தை) என்பவனும் விளங்கினார்கள். 1697 ஆம் ஆண்டும் வன்னிப்பிரதேசம் ஆறு வன்னிப்பிரதேசங்களாக இருந்துள்ளது. பனங்காமம் - பரந்தன் வெளி, பேகன் விளாங்குளம் - புதுக்குடியிருப்பு - தென்னமரவாடி என்பன அவையாம். இவற்றின் வன்னிமைகளாக முறையே டொன்பிலிப் நல்லமாப்பாணன், இலங்கை நாராயணன், பெரிய மெயினார் உடையார், டொன்தியோகு புவி நல்ல மாப்பாணன், அம்பலவாணவன்னியன், சேதுகாவல மாப்பாணன் என்போர் விளங்கினர். 1697 இல் புதுக்குடியிருப்பு பேக் விளாங் குளத்தோடும் கரிக்கட் மூலை மேல்பற்றோடும் சேர்க்கப்பட்டு முள்ளியவளை தனியாக அமைக்கப்பட்டிருந்தது. ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்திலும் ஆட்சியாளருடன் வன்னித் தலைவர்கள் முரண்பட்டே நடந்து கொண்டனர். ஒழுங்காகத் திறை செலுத்தி வரவில்லை. 1680 ஆம் ஆண்டு 313 யானைகள் திறைப்பாக்கியாக இருந்தன. இத்திறையை அறவிடமுடியாத நிலையில் ஒல்லாந்தர் நீக்கியபோதும் 1696 இல் 70 யானைகள் மீண்டும் திறைப்பாக்கியாக இருந்தன. யாழ்ப்பாணக் கம்மந்தோரின் அதிகாரியாக இருந்த ஹென்றிக் சுவாதிக்குருன் (1694 - 1697) நல்ல மாப்பாணன், நிச்செய சேனாதிராயன், இலங்கை நாராயணன் ஆகிய மூன்று வன்னியருடன் பிணக்குக்கு உட்பட்டிருந்தான். இந்த வன்னியர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும்போது மேளதாளம் முதலான வரிசைகளோடு வரவேற்கப்படவில்லை என்பது இப்பிணக்கிற்குரிய காரணமாகும். இந்த வன்னியர்கள் பிறப்பால் கம்பனியின் பிரசைகளாக இருந்தும் சாதியிற் பொதுவான வேளாளராக இருந்தும் காலகதியில் மிகவுஞ் செருக்குற்று 'வன்னியன்' என்னும் பதவி மிகவும் மேம்பாடுடையதென்றெ நினைத்திருக்கிறார்கள். 'வன்னியன்' என்னும் பதவி கம்பனியரால் அளிக்கப்பட்டதாயிருந்தும் கம்பனியையாவது அதன் மேலுத்தியோகத்தரையாவது கனம் பண்ணவேண்டும் என நினைக்கின்றாரில்லை. கம்பனி உத்தியோகத்தர் முன் சென்று தக்க மரியாதையுடன் பணிவு காட்டுவது தங்களுக்கு வேண்டியதொன்றல்லவெனவுங் கருதுகின்றார்கள் எனஹென்றிக் சுவாதிக்குருன் தனது அறிக்கையில் எழுதியுள்ளார். 1715 இல் ஒல்லாந்தரால் புவிநல்லமாப்பாணனும் நிச்செய சேனாதிராயனும் கைது செய்யப்பட்டனர். 1716 இல் வன்னிப்பிரதேசம் நான்கு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு அந்தோணி குலசேகரம், கந்தப்பு மயிலாத்தை, சேந்தையினார் வாரி, கந்தப்பர் சிலம்பியனார் ஆகிய நால்வர் வன்னிமைகளாக நியமிக்கப்பட்டனர். 1766 இல் பனங்காமத்திற்கு கதிரிநொச்சி வன்னிச்சி தலைவியாக இருந்தாள். பனங்காமத்து வன்னியனான நிச்செயசேனாதிராயன் இறக்க அவனது மகளான கதிரிநாச்சி வன்னிச்சி அரசபொறுப்பேற்றாள். இவள் பராயமற்ற பிள்ளையாக இருந்ததால் இலகுநாதநல்லாச்சி பராமரிப்புக்காரியாக நியமிக்கப்பட்டிருந்தாள். கருநாவற்பற்று, கருக்கட்டுமூலை, முள்ளியவளை, மேல்பற்று எனும் நான்கு வன்னிப் பிரிவுகளுக்கும் புவிநல்லமாப்பாணன் என்பவனே வன்னிமையாக விளங்கினான். தென்னமரவாடிக்கு சேதுகாவல மாப்பாணன் வன்னிமையாக இருந்தான். ஒல்லாந்தர் வன்னியரின் ஆட்சியதிகாரத்தைக் குறைக்க எண்ணி கப்பித் தான் நாகெல் என்பவனை வன்னியதிகாரியாக நியமித்தபோது பனங்காமவன்னியனான நல்லமாப்பாணனின் மருமக்களான நல்லைநாச்சி, சிதம்பரநாச்சி (சின்னநாச்சி) எனுமிரு வன்னிச்சிகள் கலகம் செய்ததாகத் தெரிகிறது. நாகெல்லுக்கு எதிராக மக்களைத் திரட்டிப் போராடினர். அதில் தோல்வி கண்டதால் நல்லைநாச்சியும் அவளது கணவரும் வண்ணார்பண்ணைக்கு ஓடி அங்கு மரணமடையும் வரை கரந்துறைந்தனர். சின்ன நாச்சி முல்லைத்தீவுக் கோடி அங்கு வாழ்ந்திருந்தாள். 1790 ஆம் ஆண்டு பனங்காமத்திற்கு நல்லமாப்பாணன் என்ற வன்னியன் தலைவனாக விளங்கினான் என அறியப்படுகின்றது. இவன் மீது குற்றம் சுமத்திய ஒல்லாந்த கம்மாந்தர் இவனைக் கைது செய்து கொழும்புக்கு கொண்டு சென்று, பன்னீராயிரம் றிக்ஸ் டொலர்கள் குற்றப்பணமாக கட்டும்படி பணித்ததோடு, அது கட்டும் வரை சிறையிலிருக்குமாறும் பணித்தனர். நல்ல மாப்பாணனின் மனைவியான நல்லைநாச்சியார் வண்ணார்பண்ணைக்குச் சென்று வைத்திலிங்கச் செட்டியாரிடம் அடைக்கலம் புகுந்தாள். தனது கணவர் விடுதலையாகும் வரை குளித்தலைக் கைவிட்டதுடன் ஒரு நேர உணவுடன் விரதமிருந்தாள். வைத்திலிங்கச் செட்டியார் ஒல்லாந்தராட்சியில் மிகுந்த செல்வாக்குடையவராக இருந்தமையால், கொழும்பு சென்று நல்லமாப்பாணனை விடுவித்து வந்தார். அதற்குப் பிரதியாக வைத்திலிங்கச் செட்டியார் வண்ணைச்சிவன் கோயிலைக் கட்டியபோது அக்கோயில் கட்டமைப்புக்குத் தேவையான மரங்களை வாங்கியதோடு தோரங்கண்டல் கிராமத்தையும் கோயில் தொண்டு இடையறாது நடைபெற வழங்கினர்.

### பண்டார வன்னியன்

வன்னியரசுகளின் இறுதிச் சிற்றரசனாக குலசேகர வைரமுத்து பண்டாரவன்னியன் என்பான் விளங்கியுள்ளான். வன்னி நாட்டின் சுதந்திரத்திற்காக இறுதிவரை போராடி மடிந்தவன் என்ற பெரும் புகழ் இவனுக்குண்டு. பண்டாரவன்னியன் ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதிப்பகுதியிலும் ஆங்கிலேயர் ஆட்சியின் முற்பகுதியிலும் வாழ்ந்தான். ஒல்லாந்தருக்கோ ஆங்கிலேயருக்கோ அடங்கித் திறை செலுத்தி வாழப் பண்டாரவன்னியன் உடன்படவில்லை. ஒரு தடவை ஆள்பதி தங்களுக்குத் திறையாகச் சாயவேர் தரவேண்டும் எனக் கேட்டபோது பண்டாரவன்னியன் அந்தப் பணிப்பை நிராகரித்துள்ளான். கப்டன் வொன்டிறிபேக், ஆங்கிலேயப்படையில் சேர்ந்து கொண்ட ஒல்லாந்தனாவான். இவனுக்கும் பண்டாரவன்னியனுக்கும் இடையில் மோதல்கள் நிகழ்ந்துள்ளன. 1803 ஆம் ஆண்டு ஆங்கிலேயருககும் கண்டியரசனுக்கும் இடையில் யுத்தம் மூண்டது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திய பண்டாரவன்னியன் மூன்று படைப்பிரிவுகளை இரவோடிரவாக அனுப்பி, ஆனையிறவுக் கோட்டை, இயக்கச்சி பைல் கோட்டை, வெற்றிலைக்கேணி பெஸ்சூற்றர் கோட்டை ஆகியவற்றைத் தாக்கினான். முள்ளியவளையிலிருந்தும் சுண்டிக்குளம் ஊடாகச் சென்ற பண்டாரவன்னியனின்படை பெஸ்சூற்றர் கோட்டையைக் கைப்பற்றியது. குமாரசிங்க முதலியார் தலைமையில் கண்டாவளையூடாகச் இயக்கச்சிக்குச் சென்ற வன்னி வீரர்கள் பைல் கோட்டையைக் கைப்பற்றினர். கோட்டைகளில் இருந்த படையினரில் ஒரு பகுதியினர் கொல்லப்பட்டனர். ஒரு பகுதியினர் தப்பி யாழ்ப்பாணத்திற்கு ஓடினர். தாம் கைப்பற்றிய கோட்டைகளை தகர்த்து விடுமாறு பண்டாரவன்னியன் கட்டளையிட்டான்.




(தொடரும்)

படிப்பகம்